**O.S.No.465/2019**

**PW 1:** ஷாஜிதா ஷாபிரா ஷீயாத்அலி தேதி 17.02.2026

வாசா1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் பிளஸ்டு படித்து இருக்கிறேன். வழக்கிற்கான ஆவணங்களையும் விபரங்களையும் நான் தான் வழக்கறிஞரிடம் ஒப்படைத்தேன். நான் தாக்கல் செய்த ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் என்னிடம் இல்லை. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. அங்கு என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. என்னுடைய வீடு ஈரோடு பி.பீ. அக்ரஹாரத்தில் உள்ளது. பார்சல் வாங்குவதற்கான சேலம் போக வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல, வேலை விஷயமாக என் கணவர் போய்இருந்தார். பார்சல் வாங்க போனதாக நான் சொல்லியிருந்தால் அது தவறா என்றால் இல்லை, என் கணவர் வேலை விஷயமாக போன போது பார்சல் வாங்க சென்ற போது மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்கிறேன். வா.சா.ஆ.1 புகாரை நான் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான், சேலம் வி.ஏ.ஓ. கொடுத்தார் அதன் பிறகு நான் சென்றேன். அந்த புகாரில் காற்றும், மழையும் அடித்ததால் விபத்து நடந்ததாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் காற்றும், மழையும் அடித்ததால் அந்த கட்டிடம் சரி வர கட்டப்படாமல் இருந்ததால் இடிந்து விழுந்துவிட்டதாக சொல்கிறேன். வாசாஆ 3 வழக்கறிஞர் அறிவிப்பு முதலில் 3 நபர்களுக்கு அனுப்பப்பட்டது என்று சொன்னால் நாங்கள் முதன் முதலில் நில உரிமையாளர்கள் இருவருக்கும் பின்னிட்டு குத்தகைதாரர்களுக்கும் அடையார் ஆனந்த பவனுக்கு பிரான்சைஸ் கொடுத்தவருக்கும் அனுப்பினேன். 4ம் பிரதிவாதி சார்பாக 14.1.2019 அன்று பதில் அறிவிப்பு வாசாஆ 9 கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பதிலை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த பதில் அறிவிப்பில் சொல்லியிருக்கும் சங்கதிகள் சரியல்ல.

4ம் பிரதிவாதி தரப்பு பதில் அறிவிப்பில் 4 மற்றும் 3 பிரதிதிவாதிகளுக்கிடையே ஒரு குத்தகை ஒப்பந்த பத்திரம் உள்ளது என்று சொல்லியிருக்கிறாரா என்றால் சாட்சி வாசாஆ 9 ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு ஆம் அவ்வாறு தான் சொல்லியிருக்கிறார் என்று கூறினார். நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 1, 3, 7, 8, 9 மற்றும் பிராது ஆகியவற்றில் அன்றைய தினம் கடுமையான இடி மின்னல் மழை ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் கூடுதல் எதிர் வழக்குரையில் தாக்கல் செய்யும் போது 2014 ம் வருடத்திற்கு லீஸ் ஒப்பந்த பத்திரத்தையும் 2021 ம் வருடத்திய பத்திரத்தையும் எனக்கு நகல் கொடுத்து தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னார் என்றால் சரிதான். மேற்படி பத்திரங்களை நான் பார்த்தேன். 2014 ம் வருடத்திய ஒப்பந்தத்தில் கட்டிடங்கள் சம்மந்தமாக அனுமதிகளை பெற்று கொள்வது 3ம் பிரதிவாதியின் பொறுப்பு என கண்டுள்ளது என்றால் சரியல்ல. 2014 ஒப்பந்த படி 4ம் பிரதிதிவாதி கடை நடத்துவது மட்டும் தான் பொறுப்பு என்றும் கடைக்குரிய கட்டிடங்கள் மற்றும் பர்னிச்சர் ஆகியவற்றை 3ம் பிரதிவாதி தான் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 5.2.2021 ம் வருடத்திய லீஸ் அக்ரிமென்ட்டை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். 2014 ம் வருடத்திய ஒப்பந்த பத்திரத்தில் பக்கம் 5 ல் 10 ம் பத்தியில் சொத்து சம்மந்தப்பட்ட இன்சூரன்ஸ் 3ம் பிரதிவாதி தான் செய்து கொள்ள வேண்டும் என்று வாசகங்கள் உள்ளது என்றால் சரியல்ல. 2021 ம் வருட ஒப்பந்த பத்திரத்திலும் கட்டிடங்கள் கட்டுவது சம்மந்தமாக எந்த வித விபத்து ஏற்பட்டாலும் 3ம் பிரதிவாதி தான் செலுத்த வேண்டும் என்று உள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 5.2.2021 ல் ஏற்பட்ட ஒப்பந்ததிலும் அது சம்மந்தப்பட்ட விபத்துகள் எது ஏற்பட்டாலும் 3ம் பிரதிதிவாதி தான் பொறுப்பாவார் என்றால் அது எனக்கு தெரியாது. கூடுதல் எதிர் வழக்குரை படித்து பார்த்தேனா என்றால் ஞாபகத்தில் இல்லை. 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் மேனேஜிங் பார்ட்னரை மட்டும் தான் தரப்பினராக சேர்த்திருக்கிறேன் மற்ற பங்குதாரர்களை நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. 4ம் பிரதிவாதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தவிர வேறு

யாரையும் சேர்க்கவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. 2014 ம் வருடத்தில் இருந்து 4 பிரதிவாதி நிறுவனம் **franchise** நிறுவனமாக தான் செயல்பட்டு வருகிறது என்றால் எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி நிறுவனம் எவ்வித இழப்பீடும கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மேற்படி கட்டிடம் உரிய துறையால் ஆய்வு செய்யப்பட்டு ஒவ்வொரு வருடமும் பரிசோதனை செய்யப்பட்டு சான்றிதழ் பெறப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது என்றால் அது எனக்கு தெரியாது. அன்றைய தினம் ஏற்பட்ட விபத்தானது கட்டிடம் சரியாக பராமரிக்காததால் விழவில்லை என்றும் அதிக மழை இடி காரணமாக விழுந்து விட்டது என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் அன்றைய தினம் சாப்பிட செல்லவில்லை என்றும் மழைக்காக ஒதுங்கினார் என்றும் கடவுளின் செயலால் முன் கூரை அவர் மீது விழுந்து விட்டது என்றும் அதனால் 4ம் பிரதிவாதி எவ்வித இழப்பீடும் தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் தோல் வியாபாரம் செய்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்னிடம் எதுவும் இல்லை. தோல் வாங்கி குடோனில் வைத்து விற்பார். மேற்படி விற்பனை சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் என் வசம் இல்லை. அவ்வாறு தோல் வியாபாரம் எதுவும் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் வருமான வரி செலுத்தினாரா என்றால் அது எனக்கு தெரியாது. என் கணவருக்கு வருமானம் எதுவும் இல்லை என்பதால் தான் அவர் வருமான வரி செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் கோரும் இழப்பீடு தொகை மிகவும் அதிகமானது என்றால் சரியல்ல.